(இ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டப் பேரவை (தகுதியின்மை நீக்கல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 3/1967).

மதிப்பிற்குரிய திரு. சி. என் அண்ணுதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டப் பேரவை (தகுதியின்மை நீக்கல்) மசோதாவை (சட்டப் பேரவை மசோதா 3/1967) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் ".

என்று நான் முன்னுரைக்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4, 5 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

அட்டவணை.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அடுத்து அட்டவணை, அதற்கு ஒரு திருத்தம் இருக்கிறது. அதை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir I move the following amendments :—

In the Schedule, in item 2, for "Whip" wherever it occurs substitute "Government Whip"

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அரசினர் திருத்தம் 'கொறடா' என்ற சொல் (விப்) வருகிற இடங்களிலெல்லாம் 'அரசினர் கொறடா' என்று திருத்தி வாசித்துக் கொள்ள வேண்டும் என்பது. இந்தத் திருத்தத்தை இப்பொழுது அவை முன்பு வைக்கிறேன். திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டுமா என்பது கேள்வி.

திருத்தப்பட்ட அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டது.

தித்தப்பட்ட அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

நெடுந்தலைப்பு, முன்னுரை, முதல் பிரிவு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணுதுரை : 'தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டப் பேரவை (தகுதியின்மை நீக்கல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 3/1967), திருத்தப்பட்டபடி, நிறைவேற்றப்பட வேண்டும்' என்று பிரேரேபிக்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 25th March 1967.